**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 05/2022**

2026–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 16–ம் நாள் திங்கட்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 16.02.2026 | | |
| பெயர்: | அருணாசலம் (PW–1 Chief ) | தகப்பனார் பெயர்: | நாகப்பன் |
| கிராமம்: | வழுதலைக்குடி | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | சுயதொழில் | வயது : | 58/2026 |

**முதல் விசாரணை : 16.02.2026**

நான் இவ்வழக்கின் வாதியாவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். என்னுடைய சாட்சியத்தை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அந்த நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். அந்த நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். வழக்கிற்கு ஆதரவாக கீழ்காணும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1. 04.01.2020 தேதியிட்ட 1ம் பிரதிவாதி எனக்கு எழுதிக்கொடுத்த கிரய சாசன ஒப்பந்தம் அசல் **வா.சா.ஆ.1** ஆகவும்

2. 23.12.2021 தேதியிட்ட முதல் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் **வா.சா.ஆ.2** ஆகவும்

3. 27.12.2021 தேதியிட்ட முதல் பிரதிவாதி அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை அசல் **வா.சா.ஆ.3** ஆகவும்

4. 25.02.2008 தேதியிட்ட முதல் பிரதிவாதிக்கு நான் எழுதிக்கொடுத்த தாவா 1வது அயிட்ட சொத்தை பொறுத்த கிரய சாசன சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.4** ஆகவும்

5. 12.03.2008 தேதியிட்ட முதல் பிரதிவாதிக்கு எனது சகோதரர் கனகசபை எழுதிக்கொடுத்த தாவா 2வது அயிட்ட சொத்தை பொறுத்த கிரய சாசன சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.5** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.